ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය / எனது இல. / My No.    ඔබේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date    25 April, 2020

**<u>மின்னஞ்சல் ஊடாக</u>**

திரு.சி.டி.விக்கிரமரட்ண,

பொலிஸ் பொது ஆய்வாளர் (பதில்) ,

பொலிஸ் தலைமை அலுவலகம்,

கொழும்பு 01

**<u>சனநாயகத்தில் கருத்துச் சுதந்திரத்தை மட்டுப்படுத்தல்</u>**

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆனது , சமூகவலைத்தளத்தின் மீது முன்வைக்கப்படும் கூற்றுக்களின் அடிப்படையில் , குறிப்பாக கொவிட் 19 வைரஸ் தொற்றின் பிண்ணனியில் நாட்டின் பொலிஸால் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான அண்மைய கைதுகளை அவதானிக்கிறது.

பொலிஸ் திணைக்களத்தின் ஊடகப் பிரிவால் ஊடக நிறுவனங்களது தலைவர்களிற்கு வைரஸ் தொற்றுக் கட்டுப்படுத்தலில் ஈடுபட்டுள்ள பொது அதிகார சபைகளிற்கு எதிராக இணையத்தளத்தில் பொய்யானதும் தீங்கு இழைக்கக் கூடியதுமான கூற்றுக்களை வெளியிடுவோரிற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கும் 2020 ஏப்ரல் 1 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து இத்தகு கைதுகள் அதிகரித்த எண்ணிக்கையில் மேற்கொள்ளப்படுவதை நாம் அவதானித்துள்ளோம். இக்கடிதம் அதிகாரிகளை விமர்சித்தல் பொறுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்ற செய்தியை தெளிவாகக் குறிப்பிடுகிறது.

சனநாயகம் ஒன்றில் கருத்துச் சுதந்திரம் மற்றும் அத்தகு பிற உரிமைகள் என்பனவற்றை மட்டுப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கை , அவசர காலத்தின் போதும் கூட , சட்டக் கட்டமைப்புக்கு அமைய இருத்தல் அவசியம் என்பதை சுட்டிக்காட்டுதல் எமது ஆணைக்குழுவின் கடமை ஆகும். இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமுடைய சட்டம் அரசியலமைப்பு மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள் என்பன ஆகும். இச்சட்டங்கள் உரிமைகளின் மீதான மட்டுப்பாடுகள் ஆனவை , வலிதாந்தன்மை , விகிதாசாரம் ( மட்டுப்பாடு ஆனது ஊறிற்கு விகிதாசாரத்தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்) மற்றும் பாராபட்சமின்மை முதலான பரீட்சைகளிற்கு இணங்குதல் வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றன. இது தொடர்பில் , இலங்கையின் உயர்நீதிமன்றம் வளமுள்ள அதிகாரம் மிக்க சட்டவியலை விருத்தி செய்துள்ளது.

ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / e-mail: sechrc@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

மேற்கூறப்பட்டவை தொடர்பில் , ஆணைக்குழு ஆனது , பின்வரும் விடயங்களை உமது கவனத்திற்கு கொண்டு வருவதற்கு விரும்புகிறது. 21 ஆம் இலக்க 1996 ஆம் ஆண்டின் தாய்ச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் என்பனவற்றின் கீழ் நாம் இதனை மேற்கொள்கிறோம்:

1. தவறான தகவலின் அடிப்படையிலான கைதுகள்

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆனது , நாடு முழுதும் முன்னெப்போதும் ஏற்படாத பொது சுகாதார நெருக்கடியை சந்தித்துள்ள வேளையில் பொது சுகாதாரம் மற்றும் பொது ஒழுங்கு என்பனவற்றுக்கு பீதியையும் தீவிரமான ஊறினையும் ஏற்படுத்தத்தக்க தவறான தகவலை சட்ட ரீதியாக கட்டுப்படுத்துவதன் தேவையை அங்கீகரிக்கிறது. எவ்வாறாயினும் இக்கைதுகள் தன்னிச்சையானதாகவும் சமமற்றும் பாராபட்சமுடன் மேற்கொள்ளப்படாது , சட்ட ரீதியில் வலிதுடையதாக வேண்டும்.

மேலுள்ள கைதுகளுடன் தொடர்புடைய B அறிக்கைகள், பல்வேறு நியதிச் சட்டங்களை அத்தகு கைதுகளுக்கான சட்ட அடிப்படையை உருவாக்குவதாக குறிப்பிடுவதை நாம் அவதானிக்கிறோம். இவை , தண்டனைச் சட்டக் கோவை (பிரிவு 120) , 24 ஆம் இலக்க 2007 ஆம் ஆண்டின் கணினிக் குற்றங்கள் சட்டம் (பிரிவு 6) , பொலிஸ் கட்டளைச் சட்டம் (பிரிவு 98), தொற்று தடைகாப்பு கட்டளைச்சட்டம் (பிரிவு 4 மற்றும் 5) மற்றும் 13 ஆம் இலக்க 2005 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவச் சட்டம் (பிரிவு 24) என்பனவற்றை உள்ளடக்குகிறன.

அனர்த்த முகாமைத்துவச் சட்டம் மற்றும் தொற்று தடைகாப்பு கட்டளைச்சட்டம் என்பனவற்றின் பிரிவுகளை சட்ட அடிப்படையாக உபயோகித்தல் பின்வரும் காரணங்களிற்காக கேள்விக்குட்படுத்தப்படலாம் என்பதை நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்: தொற்று தடைகாப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி ஒன்று மீறப்பட்டுள்ள போதே அக்கட்டளைச்சட்டத்தின் பிரிவு 4 ஆனது நோக்கப்பட முடியும். குற்றம் சாட்டப்பட்டுள்ள கூற்றுகளிற்காக கைது செய்யப்பட்டுள்ள பல்வேறு நபர்கள் எவ்வாறு கட்டளைச்சட்டத்தின் கீழ் நிலவும் ஏதேனும் ஒழுங்கு விதிகளை மீறினர் என்பதும் அல்லது கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் கடமைகளை நிறைவேற்றுதலை எவ்வாறு தடை செய்தனர் என்பதும் தெளிவில்லை. இதே போன்று , அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 11 இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு பாராளுமன்றினால் அங்கீகரிக்கப்பட்ட நாட்டின் அனர்த்த முகாமைத்துவ நிலையை வெளியிடும் பிரகடனம் ஒன்று இல்லாத பட்சத்தில் , இச்சட்டத்தின் பிரிவு 24 நோக்கப்பட முடியுமா என்பது கேள்விக்குரியது ஆகும்.

ஓரு B அறிக்கை ஆனது , கைதிற்கான எந்த சட்ட அடிப்படையையும் குறிப்பிடவில்லை. தவறான தகவலால் பொது சுகாதாரம் மற்றும் பொது ஒழுங்கு என்பன மீது ஏற்படவுள்ள எதிர்மறையான தாக்கங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனின் , சட்ட செயற்படுத்தல் அதிகார சபைகளால் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு வலிதான சட்ட அடிப்படை ஒன்று காணப்பட வேண்டும். மேலும் உண்மையான தவறுகள், நல்லெண்ணம் அல்லது பொது அக்கறை என்பனவற்றின் மீது மேற்கொள்ளப்படும் கூற்றுக்கள் ( தவறை தட்டிக் கேட்போர் முதலானோரால்) மற்றும் தீங்கை ஏற்படுத்தும் எண்ணமுடன் மேற்கொள்ளப்படும் கூற்றுக்கள் என்பனவற்றுக்கு இடையே கவனமாக வேறுபாடு காணப்பட வேண்டும்

ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrc@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

எனவே, பிழையான தகவலிற்காக மேற்கொள்ளப்படும் அண்மைய கைதுகளின் சட்ட அடிப்படைகளை மீளாய்வு செய்யுமாறு உங்களிற்கு பரிந்துரைக்கிறோம். அதனால் தக்க செயன்முறை தேவைப்பாடுகளுடன் இணங்குவதுடன் , ஏதேனும் எதிர்கால கைதுகள் கண்டிப்பாக சட்டத்திற்குள் அமையும் என்றும் உறுதி செய்யப்படும்.

2. அச்சுறுத்தும் விமர்சனம்

அதிகாரிகளை விமர்சிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடக நிறுவனங்களிற்கு பொலிஸ் ஊடகப் பிரிவின் கடிதம் மூலம் வெளியிடப்பட்டுள்ள எச்சரிக்கை ஆனது மக்களின் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தின் மீது அச்சுறுத்தும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதன் காரணமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஆழ்ந்த அக்கறையுடன் நோக்கப்பட்டுள்ளது.

பொது அதிகாரிகளின் அல்லது எவரேனும் ஒருவரது செயற்பாட்டை அல்லது ஏதேனும் கொள்கையை விமர்சித்தல் மற்றும் கருத்துரைத்தல் உரிமை ஆனது ஒரு சனநாயக சமூகத்தின் அடிப்படை அமிசம் ஆகும். விமர்சனம் அல்லது விவரணம் என்பன மூலமே நாம் அரசை மேம்படுத்துவதுடன் , சனநாயகத்தையும் வலுப்படுத்துகிறோம். இக்கோட்பாடுகள் ஆனவை , இலங்கையின் உயர்நீதிமன்றத்தின் தொடர்ச்சியான அதிகாரம் மிக்க தீர்ப்புகளின் மூலம் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளன. ( காண்க ***Joseph Perera v. AG*** (1992) 1 Sri.L.R. 199; ***Amaratunga v. Srimal*** (1993) 1 Sri.L.R.264)

எனவே பொது அதிகாரிகள் அல்லது கொள்கைகள் பற்றிய மேம்போக்கான ஏதேனும் கைது அரசியலமைப்பிற்கு முரணானது ஆகும் என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

3. வெறுப்ப பேச்சு

பன்முகத்தன்மையுடைய சமூகங்களிற்கு இடையே அமைதியான சகவாழ்வை பாதுகாக்கும் பொருட்டு சட்டத்தின் மூலமாக வெறுப்பு பேச்சை கட்டுப்படுத்துவதற்கான உடனடித் தேவையை இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கிறது. சமகால சுகாதார நெருக்கடியின் பிண்ணனியில் மதங்களிற்கு இடையே பிரிவினை மற்றும் வெறுப்பு என்பனவற்றை தூண்டுவதற்கு முயற்சிப்போருக்கு எதிராக ICCPR சட்டத்தின் பிரிவு 3இன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு கோரி மிக அண்மையில் 2020 ஏப்ரல் 30ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை நாம் எழுதியிருந்தோம்.

மேலுள்ள பிரிவு தொடர்பான பிரயோகம் மீதான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டிகளை , இதற்கு முன்னர் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட எமது தொடர்பாடல் மூலம் நாம் முன்வைத்திருந்தோம். நபர் ஒருவர் (அ) தேசிய , இன அல்லது மத வெறுப்பு தொடர்பான பரிந்துரை (ஆ) மற்றும் வன்முறை , பாராபட்சம் அல்லது விரோதம் ஆகியவற்றை ஏற்படுத்தும் எண்ணம் என்பனவற்றை கொண்டிருப்பதற்கான நியாயமான சான்று


ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / Head Office: 14, ආර්. ඒ. ද මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. / 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2505541 / 74
ඊමේල් / மின்னஞ்சல் / e-mail: sechrc@gmail.com
දුරකථන / தொலைபேசி / Telephone: 94 -11- 2505580 / 81 / 82
ලේකම් / செயலாளர் / Secretary: 011-2505521
ක්ෂණික / துரித அழைப்பு / Hotline: 1996
වෙබ් / இணையம் / Web: www.hrcsl.lk

காணப்படும் போது , சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரசபைகள் நடவடிக்கை எடுக்க கடமைப் பட்டுள்ளன என்பதை நாம் சுட்டிக்காட்டி இருந்தோம்.

இதேவேளை சகல சமூகங்களிற்கும் பாதுகாப்பை அளிக்க பிரிவு 3 ஆனது பாராபட்சமற்ற வகையில் நோக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தல் அவசியமானது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இல்லையேல் , சட்டம் ஆனது சில சமூகங்களிற்கு எதிரான ஒரு ஆயுதம் ஆவதுடன் , அச்சட்டம் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டமைக்கான அடிப்படை நோக்கத்தையும் தோற்கடிக்கிறது.

மேற்குறிப்பிட்ட பிரிவின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் மீதான எமது அவதானிப்புகளின் அடிப்படையில், இப்பிரிவு பாராபட்சமற்ற முறையில் நோக்கப்பட்டுள்ளது எனும் நியாயமான முடிவிற்கு வருவதற்கு எம்மால் இயலவில்லை.

முன்னெப்போதும் ஏற்படாத இச்சுகாதார நெருக்கடி காலத்தில் பொது சுகாதார அதிகார சபைகளிற்கு ஆதரவாக பொலிஸ் திணைக்களத்தால் வகிக்கப்பட்ட பங்கு குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆனது அதன் ஆழ்ந்த பாராட்டுக்களை மீண்டும் வலியுறுத்துகிறது. எவ்வாறாயினும் பொலிஸ் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நடவடிக்கைகளின் மனித உரிமைகள் சார் விளைவுகளை சுட்டிக்காட்டுவது எமது ஆணைக்குழுவின் கடமை ஆகும். நாம் எமது அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் எமது ஆணைக்குழுவின் நோக்கிற்கு அமைய நிறைவேற்று மற்றும் நிர்வாகம் மனித உரிமைகள் சட்டத்திற்கு இணங்கி அமைதல் வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் முன்வைக்கிறோம். நாம் மேலே ஆராயப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்யுமாறும் , சட்டத்துடன் இணங்கி அமைதலை உறுதி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்துகிறோம்.

இந்த இடர் மிகுந்த காலத்தில் இருந்து இலங்கை ஆனது சட்டவாட்சி மற்றும் அரசியலமைப்பு ஆட்சி என்பன மீது மிகுந்த நம்பிக்கையுடன் மீள் எழ வேண்டியத் தேவையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறது. சட்டத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்படும் தற்காலிகத் தீர்வுகள் நீண்ட கால கட்டத்தில் சனநாயக ஆட்சியின் மீது எதிர்மறையான மரபை ஏற்படுத்த வல்லன. எமது அரசியலமைப்பு மற்றும் எமது சர்வதேச மனித உரிமைகள் சார் கடப்பாடுகள் இரண்டும் அவசர காலங்களின் போது சட்டவாட்சி அல்லது மனித உரிமைகளின் பாதுகாப்பு என்பனவற்றை சிதைக்காது அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கின்றன. அப்பாதையை தொடருவதே எமது நாட்டிற்கான வலிமை ஆகும்.

பேராசிரியர். டி. உடகம

தலைவர் / இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பிரதான அலுவலகம் Head Office | 14, ஆர்.ஏ.த. மெல் மாவத்தை, கொழும்பு - 04. 14, R. A. De Mel Mawatha, Colombo - 04. | தவிசாளர் Chairperson | 011-2505451 | தொலைநகல் Fax | 011-2505541 / 74 | மின்னஞ்சல் e-mail | sechrc@gmail.com |
| தொலைபேசி Telephone | 94 -11- 2505580 / 81 / 82 | செயலாளர் Secretary | 011-2505521 | துரித அழைப்பு Hotline | 1996 | இணையம் Web | www.hrcsl.lk |